# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
# Tamilnadu Government Employees' Association

பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.அன்பரசு**

பொதுச் செயலாளர்
**ஆ.செல்வம்**

மாநில துணைத் தலைவர்கள்
**மொ.ஞானத்தம்பி**
**ஏ.பெரியசாமி**
**இரா.மங்களபாண்டியன்**
**என்.வெங்கடேசன்**
**மு.சீனிவாசன்**
**கோ.பழனியம்மாள்**

மாநிலப் பொருளாளர்
**மு.பாஸ்கரன்**

மாநிலச் செயலாளர்கள்
**சி.ஆர்.இராஜகுமார்**
**இரா.ந.நம்பிராஜன்**
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**
**சி.பரமேஸ்வரி**
**உ.சண்முகம்**
**தெ.வாசுகி**


ஊடகச் செய்தி எண்.04/2021

நாள்.19.02.2021

## 19.02.2021 இன்று மாண்புமிகு தமிழக முதல்வர் சந்தித்து கோரிக்கைகள் நிறைவேற்ற வலியுறுத்தி சென்னையில் பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் பெருந்திரள் முறையீடு

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு முடிவின்படியும் 20.12.2020 அன்று தருமபுரியில் நடைபெற்ற மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

- புதிய பங்களிப்பு ஓய்வூதியத்திட்டத்தை ரத்து செய்து பழைய பயனளிப்பு ஓய்வூதியத்தை அனைவருக்கும் நடைமுறைப்படுத்திட வேண்டும்.
- சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், MRB செவிலியர்கள் உள்ளிட்ட தொகுப்பூதியம் மற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட வேண்டும்.
- இளைஞர்களின் வேலைவாய்ப்பினைப் பறிக்கும் திரு, ஆதிசேஷய்யா, இ.ஆ.ப. அவர்களின் தலைமையிலான பணியாளர் சீரமைப்பு குழுவின் பரிந்துரைகளை ரத்து செய்திட வேண்டும்.
- நிறுத்தப்பட்ட அகவிலைப்படி உயர்வு, ஈட்டிய விடுப்பு ஒப்பளிப்பு ரத்து, பொது சேமநல நிதி வட்டி விகிதம் குறைப்பு ஆகியவற்றை திரும்ப வழங்கிட வேண்டும்.
- அரசுத்துறைகளில் காலியாகவுள்ள நாலரை லட்சம் காலிப்பணியிடங்களை உடனடியாக காலமுறை ஊதியத்தில் நிரப்பிட வேண்டும்.

எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாநில நிர்வாகிகளை அழைத்துப்பேசி கோரிக்கைகள் நிறைவேற்ற வலியுறுத்தி கீழ்க்கண்ட இயக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84

தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


1. முதல் கட்ட நடவடிக்கையாக "ஜனவரி-5 முதல் 12 வரை மாநில முழுவதும் உறுப்பினர் சேர்ப்பு மற்றும் பிரச்சார இயக்கம்" நடைபெற்றுள்ளது.

நான்காம் கட்ட நடவடிக்கையாக பிப்ரவரி 2 முதல் மாவட்டத் தலைநகரங்களில் தொடர் மறியலும் சிறை நிரப்பும் போராட்டமும் நடைபெற்றுள்ளது.

கோரிக்கைகள் தொடர்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாநில நிர்வாகிகளை அழைத்துப்பேசி தீர்வு காணப்பட வேண்டுமென வலியுறுத்தி இன்று (பிப்ரவரி-19) சென்னையில் பெருந்திரள் முறையீடு இயக்கம் நடைபெற்றது.

இப்பெருந்திரள் முறையீடு இயக்கத்திற்கு மாநிலத் தலைவர் **மு. அன்பரசு** தலைமை வகித்தார்.மாநிலப் பொருளாளர் **மு. பாஸ்கரன்** வரவேற்புரையாற்றினார். பொதுச்செயலாளர் **ஆ. செல்வம்** கோரிக்கைகளை விளக்கி உரையாற்றினார்.

பெருந்திரள் முறையீடு இயக்கத்தினை முன்னாள் மாநிலத் தலைவரும், தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாநிலத் தலைவருமான **நெ,இல. சீதரன்** தொடங்கி வைத்து உரையாற்றினார்.

பெருந்திரள் முறையீடு இயக்கத்தினை வாழ்த்தி **ச. மயில்,** பொதுச்செயலாளர், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, **கு. வெங்கடேசன்**, மாநில ஒருங்கிணைப்பாளர், ஜாக்டோ-ஜியோ ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கோரிக்கை நியாயங்களை விளக்கி **எம்.பி. முருகையன்,** மாநில பொதுச்செயலாளர், தமிழ்நாடு வருவாய்ததுறை அலுவலர் சங்கம், **ச. பாரி,** பொதுச்செயலாளர், தமிழ்நாடு ஊரகவளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம், **சி. கலைச்செல்வி,** மாநில துணைத்தலைவர், தமிழ்நாடு வணிகவரிப் பணியாளர் சங்கம், **ம. அந்தோணிசாமி,** ஆட்சிமன்றக்குழு உறுப்பினர், தமிழ்நாடு தொழில்நுட்ப ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பு, **ப. சுந்தரம்மாள்,** மாநிலத் தலைவர், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம், **ஆ, அம்சராஜ்,** பொதுச்செயலாளர், தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப்பணியாளர் சங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

பெருந்திரள் முறையீடு இயக்கத்தை நிறைவு செய்து சிஐடியுவின்அகில இந்திய துணைத் தலைவர் **T.K. ரங்கராஜ,** Ex.M.P. நிறைவுரையாற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் **தெ. வாசுகி** நன்றியுரையாற்றினார்.

இப்பெருந்திரள முறையீடு இயக்கத்தில் தமிழகம் முழுவதுமிருந்து பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் பங்கேற்றனர்.

| | |
|---|---|
| **(மு.அன்பரசு)** | **(ஆ.செல்வம்)** |
| மாநிலத் தலைவர் | பொதுச் செயலாளர் |